www.Padasalai.Net www.CBSEtips.in

V81

விருதுநகர் மாவட்டம்
முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு 8
தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 5×1=5

1) 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது .....
அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்
இ) எனறும் + எனறும் ஈ) என் + என்றும்

2) இயற்கையைப் போற்றுதல் தமிழா ....
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3) செவ்விந்தியாகள் நிலத்தை ..... மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூயமையாக

4) முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் .....யும் ஓட்டி விடும்.
அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை

5) நெடுமை + தேர் என்பதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....
அ) நெடுதேர் ஆ) நெடுததேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக 2×1=2

6) தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தை பெற ..... கலை காரணமாக அமைந்தது.

7) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ..... என அழைக்கப்பட்டன.

III. பொருத்துக: 3×1=3

8) வல்லின மெய் எழுத்துகள் - அ) கழுத்து
9) மெல்லின மெய் எழுத்துகள் - ஆ) மார்பு
10) இடையின மெய் எழுத்துகள் - இ) மூக்கு

IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 6×2=12

11) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
12) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
13) கொல்லிமலை பற்றி பாடல் கூறும் செய்தி யாது?
14) விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
15) வீரமாமுனிவா மேற்கொண்ட எழுத்து சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.
16) சான்றோர்க்கு அழகாவது எது?
17) ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.
18) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×4=8

19) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
20) தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
21) எவையெல்லாம ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

VI. எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி: 1×5=5

22) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.
23) தற்காலத தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

VII. அடிபிறழாமல் எழுதுக: 1×3=3

24) 'ஓடை ஆட .....' எனத் தொடங்கி 'போரா ரோடி!' என முடியும் வரை, வாணிதாசன் இயற்றிய ஓடைப் பாடலை எழுதுக.

VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×2=4

25) **கலைச்சொல் எழுதுக.**
அ) Tribes - ஆ) Locust -

26) சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.
அ) வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.
ஆ) வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.

27) கீழ்க்காணும் தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
அ) ஆ! புலி வருகிறது ஆ) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

IX. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்க: 1×8=8

28) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

29) 'நான் விரும்பும் கவிஞர்' கட்டுரையை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com